புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# "குறுநில மன்னர்களின் கொடைத்திறம்"

ப.குழந்தைவேலு
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்-636 011.

==========================================================================

## முன்னுரை

சங்ககால அரசர்கள் வரிசையில் குறுநில மன்னர்கள் குறிப்பிடத் தக்கவர்களாக இருந்துள்ளனர். அலைகுடிகளாகத் திரிந்த குழுக்கள் நிலைகுடிகளாக வாழத்தொடங்கிய சூழலில் தங்களின் குழுவைக்காக்க தலைவன் ஒருவன் தேவைப்பட்டான். குழுவைக்காக்க முன்னின்ற தலைவன் குறுநில மன்னன் என்றழைக்கப்பட்டான். இக்குறுநில மன்னர்கள், இனக்குழுச் சமுதாய மக்களிடம் காணப்பட்ட 'கொடை' எனும் பண்பினைப் பேணிக்காப்பவர்களாக இருந்துள்ளனர். கொடை எனும் பண்பில் சிறந்து விளங்கிய காரணத்தால் 'கடையெழு வள்ளல்கள்' எனும் அடைமொழியோடு அழைக்கப்பட்ட எழுவரும் குறுநில மன்னர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இக்குறுநில மன்னர்களின் கொடைத்திறம் குறித்து விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## குறுநில மன்னர்களின் இயல்புகள்

குறுநில மன்னர்கள் கொடைகுணம் உடையவர்களாகவே இருந்துள்ளனர். கொடை எனும் செயலால் உயர்புகழைப் பெற்றுள்ளனர். 'கடையெழுவள்ளல்கள்' எனும் தொடர் கொடைத்திறத்தால் பெற்ற புகழ்மொழியாகும். "பாரி, காரி, ஓரி, ஆய் போன்ற இனக்குழுத் தலைவர்களையே நிலவுடைமை மன்னர்களின் முன்னோர்களெனப் புலவர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்களை, இவர்கள் காலத்துப் புலவர்கள் எளிதில் கண்டு பரிசில்பெற முடியும். எனவே இவர்கள் புலவர்களால் வள்ளல்கள் எனப் புகழப்பட்டார்கள். இவர்கள் செல்வர்களாயினும் நிலவுடைமை அடைந்து மக்களிடமிருந்து தனித்துப்போய் வாழ்ந்தவர்களல்லர்."[1] இவர்கள் மக்களோடு மக்களாகத் தன்னை இணைத்துக் கொண்ட தலைவர்களாக இருந்துள்ளனர்.

## அதியமானின் கொடைத்திறம்

ஔவையார் அதியமான் குறித்துப் பாடுகையில் அவனது கொடைத்திறம் குறித்தும் பாடியுள்ளார். 'உண்டவர்களை நீண்டநாள் வாழச்செய்யும் அரியவகை நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவைக்குக் கொடுத்தான். இதனை,

"பெருமலை விடர்அகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல்நின் அகத்து அடக்கி
சாதல்நீங்க எமக்கு ஈத்தனையே" (புறம்.91:8-11)

என்று ஔவையார் பாடியுள்ளார். மேலும் அதியமானிடம் பரிசில்பெற பலநாள் சென்றாலும் முதல்நாள் கொடுத்ததைப் போலவே கொடுக்கும் கொடை உள்ளம் கொண்டவன் (புறம்.101:1-3), யானைக் கோட்டிடை வைத்த கவளம் போல தப்பாமல் பரிசு வழங்குவான் (புறம்.101:7-8),

*உலகில் வறுமை தோன்றினாலும் அனைவருக்கும் கொடுக்கும் கொடை உள்ளம் கொண்டவன் (புறம்.103:11-12) தனக்கு வேண்டாதவளே ஆனாலும் தன்னை நாடிவருபவர்களுக்குக் கொடுப்பவன் (புறம்.315:1-3) பாண் சுற்றத்திற்குக் கொடையாக நெல்லை நெற்போரோடு கொடுத்தவன் (புறம்.390:21-22) என்று அதியமானின் கொடைத்திறம் குறித்துப் புகழ்ந்து பாடியுள்ளார்.*

*பாரியின் கொடைத்திறம்*

*பாரியின் நண்பராகவும் அவைக்களப் புலவராகவும் விளங்கியவர் கபிலர். அவர் பாரியின் பறம்புநாடு பற்றியும் பாரியின் கொடைத்திறம் பற்றியும் பல பாடல்களில் புகழ்ந்து பாடியுள்ளார். கபிலர் பாரி மகளிரை மணந்து கொள்ள வேண்டி இருங்கோவேளைச் சந்தித்துப் பாரிமகளிரை அறிமுகப்படுத்துகையில் முதலில் பாரியின் கொடைத்திறத்தைக் கூறி அறிமுகப்படுத்துகிறார். இதனை,*

*"ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்*
*முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசை*
*படுமணி யானை பறம்பின் கோமான்" (புறம்.201:2-4)*

*எனும் பாடல் வரிகளின்மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் பாரி கொடை வழங்குவதில் 'மழைபோன்று வழங்கும் குணமுடையவன்' (புறம்.107), விறலியர்க்கு அணிகலன்களைக் கொடையாக வழங்குபவன் (புறம்.105:1). பேதையர்கள் பாடிச்சென்றாலும் கொடை வழங்குபவன் (புறம்.106:4-5), பறம்பு மலையைப் பற்றியும், தன்னைப் பற்றியும் பாடி வருபவர்களுக்குத் தன்னையே தருபவன் (புறம்.108:4-6) என்று பாரியின் கொடைத்திறம் குறித்துப் புகழ்ந்து பாடியுள்ளார்.*

*காரியின் கொடைத்திறம்*

*கடையெழு வள்ளல்களில் ஒருவரான மலையமான் திருமுடிக்காரி வழங்கிய தேர்களின் எண்ணிக்கை முள்ளூரில் பெய்த மழைத்துளிகளைவிட அதிகம் (புறம்.123:3-6) எளிய சொற்களால் பாடினால் கூட பரிசில் தருபவன் (புறம்.124:2-5) தன் மனைவியைத் தவிர மற்ற அனைத்தும் தனக்கு உரிமையில்லாதவை என்று கருதி அனைத்தையும் கொடையாக வழங்குபவன் (புறம்.122:9-10) என்று காரியின் கொடைப்பண்பு கபிலரால் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. மாறோக்கத்து நப்பசலையார் "பிறரிடம் சென்று பரிசு வேண்டாத அளவிற்குக் கொடுப்பவன்' (புறம்.126:12-13) என்று காரியின் கொடைத்திறத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார்.*

*ஆயின் கொடைத்திறம்*

*ஏணிச்சேரி முடமோசியார், ஆய்அண்டிரன் கொடைத்திறம் குறித்துப் பாடுகையில்,*

*"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்*
*அறவினை வணிகன் ஆஅய் அல்லன்" (புறம்.134:1-2)*

*என்று பாடியுள்ளார். மேலும் இவன் கொடையாகக் கொடுத்த பெண்யானைகள் கொங்கள் போட்டுவிட்டுச் சென்ற வேல்களைவிட அதிகம் (புறம்.134:5-7), பரிசாகக் கொடுத்த யானைகள் நட்சத்திரங்களைவிட அதிகம் (புறம்.129:12-13) மழை போன்று வழங்கும் குணமுடையவன் (புறம்.133:6-7) என்று ஆய்அண்டிரனின் கொடைத்திறம் குறித்துப் பாடியுள்ளார்.*

*பேகனின் கொடைத்திறம்*

*சங்ககாலத்தில் பொதினி மலையையும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களையும் ஆட்சிசெய்த குறுநில மன்னர்கள் ஆவியர் குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். "ஆவியர் குலம் என்பது ஒரு குறுநில மன்னர் குழக்குப் பெயர். அவர்கள் அரசாண்ட இடம் ஆதலால் ஆவிநன்குடி என்று ஊருக்குப் பெயர் வந்தது."[2] இந்த ஆவிநன் குடியை ஆண்ட குறுநில மன்னன் பேகன் ஆவான். அவனை வையாவிக்கோப் பெரும்பேகன் என்றும் அழைத்துள்ளனர்.*

*பேகன், மயிலுக்குப் போர்வை தந்தவன். இவன் கொடைத்திறம் குறித்துப் பாடுகையில்,*

*"படாஅம் மஞ்ஞைக்கு ஈத்தஎம்கோ*
*கடாஅ யானைக் கலிமான் பேகன்" (புறம்.141:11-12)*

*என்று பரணர் பாடியுள்ளார். மேலும் இவன் மழைபோன்று வழங்கும் கொடை குணம் உடையவன். கொடை வழங்கும் போது எளியன் போன்றும் பிறர் படை எதிர்த்து வரும்போது அஞ்சாத வீரனாகவும் இருப்பவன் என்பதனைக் 'கொடைமடம்', 'படைமடம்' (புறம்.142) எனும் சொற்களால் புகழ்ந்து பாடியுள்ளார்.*

*நள்ளியின் கொடைத்திறம்*

*நள்ளி, கடையெழுவள்ளல்களில் ஒருவனாவான். "இவன் கண்டீரக்கோப் பெருநள்ளியெனவும் வழங்கப் பெறுவான். இவன் "கரவாது நட்டோருவப்ப நடைபரிகாரம் முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத் துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு நளிமலை நாடன் நள்ளி" எனச் சிறுபாணாற்றுப்படையிலும் "ஆர்வமுற்று உள்ளி வருநர் உலைவு நனிதீரத் தள்ளாதீயும் தகைசால் வண்மைக் கொள்ளா ரோட்டிய நள்ளி" எனப் புறத்திலும் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாக வைத்துப் போற்றப்படுகிறான்."[3] இவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்ற சமயத்தில் அங்குவந்த பாணர்களுக்குக் கொடுக்கப் பொருள் ஏதும் இல்லாததால் தான் அணிந்திருந்த ஆரத்தையும், பொற்கடகத்தையும் பரிசளித்துள்ளான் (புறம்.150:20-21) நாட்டில் தன்னைநாடி வருபவர்களுக்கு அணிகலன்கள், யானைகள் போன்றவற்றை வழங்குபவன் (புறம்.148:3-4) இவனிடம் பரிசில் பெற்ற மகிழ்ச்சியில் பாணர்கள் காலை, மாலை வாசிக்க வேண்டிய பண்களின் முறை மறந்து வாசித்துள்ளதனை,*

*"மாலை மருதம் பண்ணிக் காலைக்*
*கைவழி மருங்கின் செவ்வழிப் பண்ணி*
*வரவுளமர் மறைந்தனர்........................" (புறம்.149:2-4)*

*என்று வன்பரணர் குறிப்பிட்டுள்ளார்.*

*ஓரியின் கொடைத்திறம்*

*வன்பரணர், வல்வில்ஓரியின் கொடைத்திறம் குறித்துப் பாடுகையில் 'தன்னை நாடிவரும் இரவலர்களுக்கு மணிமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட யானைகள், பொன்மாலைகள், பொற்கடகம் போன்றவற்றைக் கொடையாக வழங்கியவன் '(புறம்.153:2.5), 'தான் வேட்டையாடிய மான் தசையையும், மதுவையும் நல்குவதோடு பெருஞ்செல்வம், பொன், பொருள் கொடுப்பவன்' (புறம்.152:25-30) என்று பாடியுள்ளார். "பரிசிலர்கள் ஓரியைக் காணப்புறப்பட்ட காலத்தில் ஏதேனும் தீய நிமித்தங்கள் தோன்றியதனாலும், அன்றித் தாம் புறப்படும் வேளை நல்லோரையாக இல்லாமல் இருப்பதாலும், ஒருவேளை ஓரியைக் காணல் இது சமயம் அன்று என நின்றுபோயின் பரிசில் பெறாதது அவர்கள் குற்றமே ஆகும்"[4] என்று கூறப்படுவதிலிருந்து எப்பொழுது சென்றாலும் கொடை வழங்கும் இயல்புடையவனாக ஓரி இருந்துள்ளான் என்பதை அறியமுடிகிறது.*

*பிற குறுநில மன்னர்களின் கொடைத்திறம்*

*கடையெழு வள்ளல்களுக்குப் பிறகு அவர்களைப் போன்று கொடை வழங்குவதில் சிறந்தவனாகக் கருதப்பட்டவன் குமணன் ஆவான். அவனைப் பெருஞ்சித்திரனார், 'கடையெழு வள்ளல்களுக்கு அடுத்து அவர்களைப் போல் வழங்கும் கொடைகுணம் கொண்டவன் நீயே என்பதை அறிந்து வந்தேன்' (புறம்.158:17-20), 'முதிரை மலை தலைவன் பரிசுதருவான் என்று பிறர்கூற நான் உன்னை நாடி வந்தேன்' (புறம்.160:12-15), 'மூவேந்தர்களும் நாணும்படி பரிசுபெற்றுச் செல்வேன்' (புறம்.161:24-26) என்று புகழ்ந்து பாடியுள்ளார்.*

*மேலும், நாஞ்சில் வள்ளுவன் (புறம்.140), பிட்டங்கொற்றன் (புறம்.177), மல்லிகிழான் காரியாதி (புறம்.177), நாலை கிழவன் நாகன் (புறம்.179), இருங்கோவேள் (புறம்.201), வேள் எவ்வி (புறம்.233) போன்ற குறுநிலமன்னர்களின் கொடைத்திறம் குறித்த செய்திகளைப் புறநானூற்றின்வழி அறிந்து கொள்ள முடிகிறது.*

*தொகுப்புரை*

1. *குறுநில மன்னர்கள் மக்களோடு மக்களாக இணைந்து வாழ்ந்துள்ளனர்.*
2. *குறுநில மன்னர்கள் கொடை எனும் பண்பினைச் சிறப்பாகப் போற்றியுள்ளனர்.*

3. கடையெழு வள்ளல்களாகக் கூறப்பட்டுள்ள எழுவரும் குறுநில மன்னர்களாகவே இருந்துள்ளனர்.
4. கடையெழு வள்ளல்களுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தகும் வகையில் குமணனின் கொடைத்திறம் விளங்கியுள்ளது.
5. குறுநிலமன்னர்கள், பாணர்கள், புவலர்களுக்குப் பெரும்பரிசில் வழங்கியதோடு, யானைகள், தேர்கள் போன்றவற்றையும் கொடையாக வழங்கியுள்ளதனை ஆய்வின்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. நா.வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், பக்.150-151, 2008.
2. கி.வா.ஜகந்நாதன், ஏழுபெருவள்ளல்கள் ப.19 1959.
3. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை பரணர் ப.74, 2012.
4. பா.து.கண்ணப்பமுதிலியார், சங்ககால வள்ளல்கள், ப.17, 1951.

********* ********* ********** ********* ********* ********** ********** **********